செய்தி வெளியீடு எண்:40 நாள் : 05.09.2024

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு - பத்திரிகை செய்தி

**<u>மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் இன்று (05.09.2024) ஆசிரியர் தினத்தையொட்டி நடைபெற்ற' எண்ணித் துணிக' 16-ஆவது நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் , தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் இன்று (05.09.2024) ஆசிரியர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஆளுநரின் 'எண்ணித் துணிக' 16-ஆவது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி ஆசிரியர் மற்றும் கல்வியாளர்களைப் பாராட்டி கலந்துரையாடினார். முன்னதாக, இந்தியாவின் தலைசிறந்த தத்துவஞானி , கல்வியாளர் மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கும் ஆளுநர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் தனது தலைமை உரையின்போது, பாரதத்தை வலுவான தேசமாக உருவாக்குவதில் ஆசிரியர்கள், ரிஷிகள் மற்றும் குரு வுக்கு உள்ள முக்கிய பங்களிப்பை விரிவாகக் எடுத்துரைத்தார். மேலும் , ஆசிரியர்கள் எவ்வளவு ஆழமாக வடிவமைத்து மாணவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள் என்பதையும் விவரித்தார். இந்த ஞானத்தை இந்த மிகப்பெரிய நிலப்பரப்பில் பரப்புவர்கள் ஆசிரியர்களே என்றும் அதன் விளைவாக , மிகவும் தெளிவான பன்முகத்தன்மை மிக்க ஒரே தேசமாக நாம் வளர்ந்து கொண்டே இருக்கிறோம் என்றார் ஆளுநர்.

ஆசிரியர்களுக்கு சமூகத்துடன் அதீத தொடர்பும் மரியாதையும் உள்ளது. அவர்கள் மாணவர்களுக்கு கல்வியை மட்டுமல்ல, மதிப்புகளையும் வழங்குகின்றனர். நமது மூல அரசியலமைப்பின் முதல் பகுதியிலேயே குருகுலத்தின் சித்தரிப்பு உள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார். ஐரோப்பிய சித்தாந்தத்தைப் பின்பற்றுவதால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவு பரிவர்த்தனையாகக் குறைந்து விட்ட தை குறித்து தனது ஏமாற்றத்தை ஆளுநர் வெளிப்படுத்தினார். ஆசிரியர்கள் மற்றும் குரு என்றால் என்ன என்பதன் ஆன்மாவை அந்த சித்தாந்தம் அழித்துவிட்டது. இதை உணர்ந்து நாம்

ஆசிரியரின் பெருமையை மீட்டெடுக்கும் காலம் வந்துவிட்டது என்றார் ஆளுநர். பாரதிய கல்வி முறை எவ்வாறு மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது என்பதையும் ஆளுநர் விளக்கினார். மூன்று நிலைகளைக் கொண்ட பாரதிய கல்விமுறையை முறையாக கற்றல் , யோசித்தல், ஆழமாக சிந்தித்தல் ஆகியவை உள்ளன. இந்த மூன்று நிலைகளைக் கடக்கும்போது மிகப்பெரிய மதிப்பைக் கொண்ட ஒரு விரிவான கல்வி அறிவை உருவாக்கும். அதுவே இன்றைய தேவை. இன்று நாம் நுட்பமான சிந்தனை பற்றி பேசுகிறோம். அது ஆழமாக புரிந்து கொள்வது மற்றும் சிந்திப்பது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. நாம் இந்த திசையில் தான் பயணித்தாக வேண்டும் என்ற அளவுக்கு இன்றைய சவால்கள் உள்ளன.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் கே.காமராஜர் , தனது சிறந்த தொலைநோக்குப் பார்வையுடன் , தமிழ்நாடு முழுவதும் , அரசுப் பள்ளிகளின் பெரிய வலையமைப்பை நிறுவி , மதிய உணவுத்திட்டத்தைத் தொடங்கியதை நினைவுகூர்ந்தார். இந்த திட்டம் நமது மாநிலத்துக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துடன் பல மாநிலங்களுக்கும் முன்னோடியாக உள்ளது. அந்த அடித்தளத்துடனேயே நாம் தொடர்ந்து முன்னேறினோம்.

ஆனால், துரதிருஷ்டவசமாக, அந்த அடித்தளம் பலவீனமடைந்துள்ளது. கல்வியின் தரத்தில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஆளுநர் , தமிழ்நாடு தேச வளர்ச்சியின் இயந்திரமாகவும் இது மாநிலத்துக்கும் தேசத்துக்கும் ஆபத்தான சூழ்நிலை உருவாக்கும் என்றும் அவர் கூறினார். ஆய்வுகளின்படி, நமது அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் தரம் தேசிய சராசரியை விடக் குறைந்துவிட்டதாக ஆளுநர் குறிப்பிட்டார். நமது ஒன்பதாம் வகுப்பு மாணவர்களில் 75% பேரால் இரண்டு இலக்க எண்ணை அடையாளம் காண முடியவில்லை , அவர்களில் 40% பேரால் இரண்டாம் வகுப்பு பாட புத்தகத்தைப் படிக்க முடியாததால் அவர்கள் வேலையின்றிப் போயிருக்கிறார்கள் என்று ஆளுநர் கூறினார். இது அரசு பள்ளிகளுக்கு செல்லும் வறிய நிலையினருக்கும் தனியார் பள்ளி களுக்கு செல்வோருக்கும் இடையே விரிவடைந்து வரும் அறிவாற்ற ல் வேறுபாடுக்கு காரணமான மிகக் கடுமையான விளைவுகளை ஆளுநர் அடிக்கோடிட்டுக் காட்டினார். இது நமது மக்களின் எதிர்காலத்தை அடகு வைக்கும் செயலாகும் என்ற ஆளுநர் , இந்த விஷயத்தில் தொடர்ந்து நாம் மறுக்கும் நிலையிலேயே இருக்க முடியாது என்றும் இது சரி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நம் மாநிலத்தில் பரவி வரும் போதைப்பொருள் அச்சுறுத்தலைப் பற்றிப் பேசிய ஆளுநர் , மீண்டும் நாம் அதை ஏற்றுகொள்ளாத நிலையில் இருக்கிறோம் என்றார். ரசாயனம் மற்றும் செயற்கை போதைப்பொருள்கள் நம் சமூகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் ஒரு காலத்தில் மிகவும் வளமான மாநிலங்களில் ஒன்றாக இருந்த பஞ்சாபை போதைப்பொருள் எவ்வாறு சிதைத்துள்ளது என்பதையும் ஆளுநர் விவரித்தார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கல்வியில் மிக உயர்ந்த தரத்தை நிலைநிறுத்தவும் , போதைப்பொருள் துஷ்பிரயோகத்துக்கு எதிராக எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுத்தார். 2047ஆம் ஆண்டுக்குள் நமது தேசிய இலக்கான வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துமாறும் அதற்கேற்ப தங்களுடைய கடமையை ஆற்றி அந்த இலக்கைக் கடந்து நாம் பயணிக்கும் வகையில் செயலாற்ற வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

வளர்ந்து வரும் மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுவது மற்றும் புதுமையில் சிறந்து விளங்குவதற்கான மாணவர்களின் கனவுகளை அடைய உதவி செய்வதும் கட்டாயமாகும். இளம் மனங்களில் பெரிய கனவுகளை விதைத்து , தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும் போதித்து, எதிர்கால சவால்களைச் சமாளிக்க அவர்களைத் தயார்படுத்துமாறு ஆசிரியர்களுக்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார்.

முன்னதாக, செயற்கை நுண்ணறிவு , ஜெனரேட்டிவ் அட்வர்ஸரியல் நெட்வொர்க்குகள் , ஜெனரேட்டிவ் பயாலஜி , அவற்றின் ஆக்கபூர்வ பயன்பாடுகள் மற்றும் டீப் ஃபேக் எனப்படும் போலி தொழில்நுட்பத்தால் ஏற்படும் சவால்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுடன் மாண்புமிகு ஆளுநர் ஆழமான கலந்துரையாடலை மேற்கொண்டார். வேலைவாய்ப்புச் சந்தையில் இந்த தொழில்நுட்பங்களின் சாத்தியமான சீர்குலைவு தாக்க ம் இருப்பதாக ஒப்புக்கொண்ட ஆளுநர், இவற்றை எல்லாம் கடந்து மனித ஆற்றல் மீது வலுவான நம்பிக்கையை கொ ண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார். இளைஞர்களிடையே படைப்பாற்றல் சிந்தனையை வளர்ப்பது , தேசிய கல்விக் கொள்கை-2020, வளரும் இந்தியாவுக்கான பிரதமரின் பள்ளிகள் (பிஎம் ஶ்ரீ ) திட்டம் குறித்தும் நிகழ்ச்சியில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அலைப்பேசி மற்றும் இயந்திர பயன்பாட்டு சாதனங்களுக்கு ஆட்கொண்டு அடிமையாதல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பேசிய ஆளுநர், இந்த சவால்களின் மூலம் இளம் மன ங்களை வழிநடத்துவதில் ஒழுக்கம் மற்றும் குடும்ப விழுமியங்களின் முக்கிய பங் கு குறித்தும் வலியுறுத்தினார். கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர் , இளைஞர்களிடையே உண்மையான ச முதாய சேவை உணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்த உணர்வை வெறும் கடமையாகக் கருதாமல், இரக்கத்துடன் கூடிய பண்பாட்டு மதிப்பாக உருவாக்குவதற்கு ஆதரவாகவும் ஆளுநர் கருத்து தெரிவித்தார் . மகாத்மா காந்தி க்கு மிகவும் பிடித்த "வைஷ்ணவ் ஜனதோ" பாடலை மேற்கோள்காட்டி, இந்த அணுகுமுறை நமது சமூக நெறிமுறைகளில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

இவ்விழாவில், டாக்டர் எம்.ரவிச்சந்திரன் ( சிறந்த கல்வியாளர்), திருமதி.கே.பானுமதி (முதல்வர் , ரேவூர் பத்மநாப செட்டி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி , சென்னை), டாக்டர்.எஸ்.முத்துக்குமார் (பேராசிரியர் & துறைத் தலைவர் ., ஸ்ரீ சௌதாம்பிகா பொறியியல் கல்லூரி, அருப்புக்கோட்டை ) ஆகியோரை ஆளுநர் கௌரவித்தார். திருமதி. புவனா சங்கர் (கல்வியாளர், சென்னை), திருமதி.பி. சாந்தி (தலைமை ஆசிரியை, ஹயக்ரீவர் வித்யாஷ்ரம் மேல்நிலைப் பள்ளி , அரக்கோணம்), திரு. என்.ராமு (அரசு மேல்நிலைப் பள்ளி நெடும்பிரா , திருவண்ணாமலை மாவட்டம்) , திரு. டி.கல்யாண சுந்தரம் (குண்டூர் சுப்பையா பிள்ளை அரசு உதவிபெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி , சென்னை), டாக்டர். அனுராதா ஸ்ரீராம் (முதல்வர், ராணுவ பள்ளி, சென்னை), திருமதி. பி. சுபாஷினி ஹரிதாஸ், முதல்வர், அமிர்தா வித்யாலயம் சீனியர் பள்ளி, சென்னை) திருமதி. . சி. இளவரசி , (முதல்வர், சின்மயா வித்யாலயா சீனியர் பள்ளி, சென்னை), திருமதி. வி.கௌரிலட்சுமி(முதல்வர், சின்மயா வித்யாலயா, அண்ணாநகர், சென்னை), திருமதி.லதா கணேசன் (முதல்வர், வி.ஜி.என்.சின்மயா வித்யாலயா, அம்பத்தூர், சென்னை), திருமதி. விஜயா தேவநாதன் (சின்மயா வித்யாலயா முதல்வர் , கீழ்ப்பாக்கம், சென்னை) திருமதி. எம். சுஜாதா (முதல்வர் , டி.ஏ.வி. பப்ளிக் பள்ளி வேளச்சேரி, சென்னை) திருமதி. எம். விஜயலட்சுமி (கல்வியாளர்) , திரு.ஈ.வாசுதேவன் (முதல்வர் , யூனிட்டி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சோளிங்கர்), திருமதி. R. முத்துலட்சுமி, (தலைமையாசிரியை, தொடக்கப் பள்ளி , பி.வி. பவன் ராஜாஜி

**வித்யாஷ்ரம், கீழ்ப்பாக்கம், சென்னை) ஆகியோர் கல்வித்துறை மூலம் தேசத்துக்கு சிறப்பாக சேவை வழங்கி வருவதற்காக ஆளுநரால் கௌரவிக்கப்பட்டனர்.**

**இவ்விழாவில், விவேகானந்தா கல்விச் சங்கத்தின் முதல்வர் டாக்டர் தீபா , லாலாஜி மெமோரியல் ஒமேகா இன்டர்நேஷனல் பள்ளியின் இயக்குநர் டாக்டர் பவானி சங்கர் சுப்ரமணியன் , முக்கிய பிரமுகர்கள் , சிறப்பு அழைப்பாளர்கள் , ஆசிரியர்கள், மாநில அரசு அதிகாரிகள் , ஆளுநர் மாளிகை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**

---

**ஆளுநர் மாளிகை, வெளியீடு:-**

**சென்னை-22 மக்கள் தொடர்பு அலுவலகம்**